பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 பங்குனி 1 ரபி-ஆகி 15 இதழ்: 52
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-3-79

UNIVERSITY OF JAFFNA PERIODICALS DIVISION LIBRARY

## இந்தியாவுக்குரஷ்யஎண்ணெ

### கொஸிஜின்-தேசாய் பேச்சு வெற்றி

[புதுடில்லி]

இந்தியாவும்-சோவியத் யூனியனும் விரிவான அடிப்படையில் 4 உடன்படிக்கைகளைச் செய்து கொண்டுள்ளன.

சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்திய பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாயுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் இந்த உடன்படிக்கைகளில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர். இருவரும் 5 தடவைகள் சந்தித்துப் பேசினார்கள். இந்த உடன்படிக்கைகள் நீண்ட கால பொருளாதார ஒப்பந்தம் ஒன்றும், பாரத அரிசிக்குப் பதில் சோவியத் யூனியனிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயை இறக்குமதி செய்து கொள்வது ஆகியவை மிக முக்கியமானவையாகும்.

உடன் படிக்கைகளில் கைச்சாத்திட்டதின் பின்னர் திரு. கொஸிஜின் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடைபெற்றதாகவும் இருதரப்புக்குமிடையில் கருத்து வேற்றுமையே இல்லையென்றும் கூறினார். திரு. தேசாய் இதனை ஒப்புக்கொண்டார்.

வியட்னும் பிரச்னை குறித்து இருதரப்பினரும் ஒருமித்த கருத்தையே கொண்டிருப்பதாக இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. அட்டல் பிஹாரி வாஜ்பாயி கூறினர்.

# கூட்டுறவு ஊழியருக்கு
# 10 வீத சம்பள உயர்வு

## பிரதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் ஏனைய அரசாங்க தனியார்துறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10 சதவீத சம்பளஉயர்வு வழங்கப்படும்,

இத்தகவலை உணவு கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் திரு ராஜகருணு நேற்று தெரிவித்தார்,

அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களுக்கு ஜனவரிமாதம் முதல் சம்பள உயர்வு வழங்கப்படுகின்றது. குறைந்த பட்சம் 50 ரூபாயும் அதிகபட்சம் நாற்றுக்கு 10சத வீதமும் சம்பள உயர்வு இவர்களுக்கு இப்பொழுது வழங்கப்படுகின்றன. இச் சம்பள உயர்வு கூட்டுறவுத்துறையில் கடமைபுரியும் ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டதை யடுத்து இந்தத் துறையிலுள்ள ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குவதென அரசு முடிவுசெய்திருக்கிறது.

### அமிர் இன்று புறப்படுவார்

[கொழும்பு].

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ. அமிர்தலிங்கமும் துணைவியாரும் இன்று மாலை ஆறுமணிக்கு விமானமார்க்கமாக இந்தியாவுக்குப்புறப்படுகின்றனர்.

இந்தியாவில் முக்கிய தலைவர்களையெல்லாம் சந்தித்து திரு. அமிர்தலிங்கம் உரையாடவிருக்கின்றார்

நேற்றுமாலை இலங்கையிலுள்ள இந்திய தூதுவருக்கும் முதலாவது செயலாளருக்கும் திரு அமிர்தலிங்கம் இரவு விருந்தளித்தார் [ம]

### போட்டியிடும்

(நெல்லியடி)

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலிலும், மற்றும் உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களிலும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் போட்டியிடுமென மேற்படி கட்சியின் வாலிப முன்னணிச் செயலாளர் திரு. எ. இ. ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களுடன் ப. நோ. கூ. சங்க தேர்தல்களிலும் காங்கிரஸ் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ)

### பெற்றோல் நிலையத்தில்
## பணம் கொள்ளை

### துப்பாக்கி இளைஞர் கைவரிசை

[யாழ்ப்பாணம்]

நெல்லியடியிலுள்ள ப.நோ. கூ. சங்க பெற்றோல் நிலையத்தில் துப்பாக்கி முனையில் 492 ரூபா 4 இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 10-30 மணியளவில் பெற்ரோல் நிலையத்திற்கு சைக்கிளில் வந்த 4 இளைஞர்கள், இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது

சாரமும் சேட்டும் அணிந்து வந்த இந்த இளைஞர்கள் நால்வரும் 2 சைக்கிளில்

[6ம் பக்கம் பார்க்க]

### யாழ். நவீனமார்க்கட் வழக்கு

## மனுதார் தரப்பில் தயாரில்லை
## விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீனமார்க்கட்வழக்கில் கடைக்காரர்தரப்பில் விசாரணைக்கு ஆயத்தமில்லையெனத் தெரிவிக்கப்பட்டதால் நீதிபதி வழக்கை ஒத்திவைத்து மாநகர சபை தரப்பினருக்கு நேற்றைய வழக்கு செலவாக 200 ரூபா வழங்குமாறு கட்டளையிட்டார்.

இவ்வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் யாழ். நவீன மார்க்கட் 2ம் கட்ட பகுதி கடைகளை ரெண்டரில்வழங்கக் கூடாதென யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்திற்கு தடைவிதித்து, இடைக்கால தடை உத்தரவு வழங்குமாறு கோரி பண்ணை மார்க்கட்டைச் சேர்ந்த எம். பி சின்னராசா மனு மூலம் கோரியிருந்தார்

கடைக்காரர் சார்பில் சட்டத்தரணி எஸ் ஆர் கனகநாயகம், சட்டத்தரணி எஸ். எச். எம். சகிட் ஆகியோர் ஆஜரானர்கள் ஆணையாளர் சார்பில் சட்டத்தரணி எஸ் கதிரவேலுப்பிள்ளை, சட்டத்தரணி த பூபாலன் ஆகியோர் ஆஜரானர்கள்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும், மனுதார்தரப்பில் விசாரணைக்கு ஆயத்தமில்லாததினால் ஒத்திபோடுமாறு சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் கேட்டுக்கொண்டார்.

விசாரணைக்கு தாங்கள் தயார் என்றும், இன்று இவ்வழக்கு விசாரணைக்குபோடப்பட்டுள்ளதாகவும், ஆணையாளர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறினர்.

கடைக்காரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சகிட்

[6-ம் பக்கம் பார்க்க]

### யாழ். டுவிஸ்ட் வீரர் ஜனுப் நஸீர்

## புதிய உலக சாதனையை இன்று ஏற்படுத்துவர்?

[யாழ்ப்பாணம்]

யாழ். டுவிஸ்ட் வீரர் ஜனுப் பரீத் நஸீர் இன்று ஆருவது நாளாக மேடையில் டுவிஸ்ட் நடனமாடி வருகிறார்

உலகிலே முதலாவது டுவிஸ்ட் நடனமாடி உலக சாதனையை ஏற்படுத்திய அமெரிக்கரின் சாதனையை முறியடித்த ஜனுப் பரீத் நஸீர் தொடர்ந்து ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனையையும் முறியடித்து புதிய சாதனையையும் அண்மையில் முறியடித்து 19வயது இளைஞரான ரேகனை செனிவரத்தினவின் சாதனையையும் முறிவடிக்கும் நோக்கத்துடன் தொடர்ந்துஉற்சாகமாக நடனமாடிக்கொண்டிருக்கிறார்.

இன்று பிற்பகல் 4மணிவரை தொடர்ந்து டுவிஸ்ட் நடனமாடினுல் டுவிஸ்ட் நடனத்தில் புதிய சாதனை ஏற்படுத்தியவராவார்.

இவரது டுவிஸ்ட்நடனத்தை நேரில் சென்று பார்வையிட்ட சாவகச்சேரி எம், பி. திரு. வி. என். நவரெத்தினம் இவரைப் பாராட்டிப் பேசியபோது, இளைஞர் நஸீரின் சாதனை யாழ். நகருக்கும், யாழ். மாவட்டத்திற்கும் பெருமையைத் தேடித்தரும் சாதனை. இவர் உலகசாதனையை நிலைநாட்டி

[6ம் பக்கம் பார்க்க

JAFFNA LAW CENTRE

நடாத்தும்

1979 ஏப்ரல் G. C. E. (A/L)

கலை வர்த்தக மாணவர்க்கான

கருத்தரங்கு

16-3-79 முதல் 27-3-79 வரை

கட்டணம் சகல பாடங்களுக்கும் ரூபா 30/- மட்டும்.

நிலைய மாணவர்களுக்கு ரூபா 15/- மட்டும்.

வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பம்.

இடம்: யாழ். சட்ட நிலையம்

வெலிங்டன் அருகாமை, யாழ்ப்பாணம்.

### மாணவர் எதிர்நோக்கும் இடைஞ்சல்களை

## அரசுக்கு அறிஞர்கள் எடுத்துக்காட்டவேண்டும்

### கூட்டணித் தலைவர் கருத்து

[நெல்லியடி]

தமிழ்பேசும் மாணவர் சமுதாயம் உயர்கல்வி பெறுவதில் இடைஞ்சல்கள் பலவற்றை சந்திக்கவேண்டியுள்ளது. ஆளுவோரால் ஏற்படுத்தப்படும் இவ்விடைஞ்சல்களை மாணவர் சமுதாயமும் மற்றும் அறிஞர்களும், அரசியல் வாதிகளும் அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டவேண்டும். நாமும் தமிழ் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சல்களை அகற்ற போராடி வருகின்றோம்.

மேற்கண்டவாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த உண்டாடல் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மன்றத் தலைவர் செல்வன் எஸ்.இரத்தினலிங்கத்தின் தலைமையில் காணப்பட்ட ஒரு மயிர் கொட்டியை அகற்றிய திரு. மு. சிவசிதம்பரம் தொடர்ந்தும் உரையாற்றுகையில் நகைச்சுவையாக தெரிவித்த

(6-ம் பக்கம் பார்க்க)

# "இருநூறுமணிநேர சாதனை ஏற்படுத்த முயற்சிக்கின்றேன்!"

## "ஈழநாடு"க்கு பரீத் நஸீர் சிறப்புப் பேட்டி

(நமது நிருபர் சச்சி)

யாழ்ப்பாணம் ஜின்னா மைதானம் என்றுமே இல்லாதவாறு மக்கள் வெள்ளத்தால் கரை புரள்கிறது. வருவோரும் போவோரும் "டுவிஸ்ட்" நடனம் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நடனத்துக்கு அப்படியொரு "மவுசு"!

இடையிடையே ஒலிபெருக்கியில், நண்பர் நஸீர் ஆடும் நடனம்... "கேளிக்கையல்ல... உலக சாதனை ஒன்றை முறியடிக்கும் 'டுவிஸ்ட்' சாதனை" என்று ஒலிக்கின்றது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்... இப்படி ஒவ்வொருவரும் ஆடுகிறார்கள்.

நூற்றுக்கு மேற்பட்ட மணித்தியாலங்கள் சாதனை!

யாழ்ப்பாணம் சோனக தெருவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜனாப் பரீத்நஸீர், தனது விடா முயற்சியினால் 'டுவிஸ்ட் சாதனையை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றார்.

ஆழிக்குமரனது சாதனையைப் போல நானும் சாதனை புரிய வேண்டுமென்று எண்ணினேன். பொம்மைவெளியை ஒத்திகை நிலமாகப் பயன்படுத்தினர், பயிற்சி, வெற்றிகரமாக இருந்தது. மக்கள் அதிகம் அறியவில்லை. பகிரங்கப்படுத்துகின்றேன்" என்கிறார் சாதனை வீரர். ஒல்லியான தோற்றம். கஅழகான மீசை. வசீகரமான பேச்சு, இளம்நகை புன்னகை...

இப்படியாக ஆடிக்கொண்டிருக்கும் நஸீரை நான் அணுகுகின்றேன்...

நேரமோ! அதிகாலை. என்ன கூறுவாரோ என்று எண்ணிப் பார்க்கின்றேன்.

வாருங்கள் நான் நல்ல திடகாத்திரத்தோடு தான் இருக்கின்றேன். பேட்டி வேண்டுமானால் தாராளமாக கேளுங்கள். ஆடிக்கொண்டே பதிலிக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே கூறுகின்றார் நஸீர்.

நஸீரின் உயிரோட்டமான சிந்தனைச் சிதறல்களுக்கு இங்கு ஒரு உற்சாகம்! நான் கேள்விகளை ஆரம்பிக்கின்றேன்.

தாங்கள் இந்தச்சாதனையை எத்தனை மணித்தியாலங்கள் செய்ய உத்தேசம் கொண்டுள்ளீர்கள்?" நான் கேட்டேன்.

"உடல் ஊனமுற்றாலும் 200 மணித்தியாலங்கள் சாதனை புரிந்து எனது சாதனையை எந்த ஒரு தனிமனிதரும் முறியடிக்காதவகையில் ஏற்படுத்தியே தீருவேன்... சிரிக்கிறார் நஸீர்.

"தங்களுக்குப் பாம்பு கடித்து. உயிர் பிழைத்ததாக பலர் கூறுகிறார்கள். பாம்பு கடித்ததால் இச் சாதனையை நிலைநாட்டும்போது உடலில் மாறுதல்கள் உண்டாக மாட்டாதா?"

"பாம்பு கடித்ததனால் இன்று களைப்பாக இருப்பதாக எண்ணவேண்டாம். அப்படியான மூடநம்பிக்கைகளிலும் எனக்கு நம்பிக்கையில்லை.

"வெளிநாடுகளில் இந்தச் சாதனையை நிலைநாட்டும் எண்ணம் உண்டா?

"ஆம் நான் இந்தியா, யப்பான், மலேசியா, ஜேர்மனி நாட்டு விளையாட்டுத்துறைப் பிரமுகர்களுடன் ஏற்கனவே தொடர்புகொண்டுள்ளேன். அழைப்பு எனக்கு வந்தால் அங்கெல்லாம் சென்று சாதனை புரிவேன்.

"சாதனை வெற்றியளித்தால் ஏதாவது தியாகம் செய்ய உத்தேசமுண்டா?

"உத்தேசம் உண்டு அவற்றையெல்லாம் பகிரங்கபடுத்தவிரும்பவில்லை"

பல்வேறு மக்களும் உங்கள் சாதனையை நிலைநாட்டும் போது இப்படியாக ஆதரவு தந்து மகிழ்விப்பார்கள் என்று ஆரம்பத்தில் எண்ணியதுண்டா?

வடபகுதிமக்கள் அன்பும் பண்பும் உள்ளவர்கள் வெற்றியை மதிப்பவர்கள் உண்மையைப் போற்றுபவர்கள் அதனால் அவர்களது ஆதரவு தாராளமாக கிடைக்கும் என்று எண்ணி எனது முயற்சியை ஆரம்பித்தேன்"

பல்துறைப்பிரமுகர்களும் உங்களது முயற்சியைப் பாராட்டும் போது நீங்கள் உணர்ச்சிவசப்பட்டதுண்டா?

ஒவ்வொருவரும் என்னைப் பாராட்டி ஊக்குவிக்கும் போது அவர்களுக்கு நான் எவ்வாறு கைமாறு செய்யப் போகின்றேன் என்று கலங்குவதுண்டு.

"வேறு ஏதாவது சாதனையைப் பற்றி திட்டமுண்டா?"

"எனது சாதனை வெற்றியளித்தால் அடுத்த சாதனை பற்றி சிந்திப்பேன்."

"இஸ்லாமிய மதப்படி இந்த நடனம் கேளிக்கையல்லவா"

"கெட்ட சிந்தனையுடன் செயல்படும் கேளிக்கை நடனத்தை இஸ்லாமிய மதம் தடை செய்கிறது. உடலை வருத்தி மதவழிபாட்டுடன் செய்யும் நடனங்களை இறைவனும் ஏற்பார்."

உங்களை அதிகம் பேச வைக்க விரும்பவில்லை. 'ஈழநாடு பற்றி தங்கள் கருத்தென்ன?

"நமது பத்திரிகை "ஈழநாடு" என்று சொல்லுமளவிற்கு எனது முயற்சிக்கு தனது ஆற்றலையும் மீறி ஆதரவளித்து வருகிறது.

[5ம் பக்கம் பார்க்க]

## சாதனை வீரருக்கு வெள்ளிக் கேடயம்

[யாழ்ப்பாணம்]

இன்று மாலை 4-50 க்கு "டுவிஸ்ட்" நடனத்தில் உலக சாதனையை நிலைநாட்டும் ஜனாப் பரீத் நஸீருக்கு வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் நிறுவன முதல்வர் திரு. மா குலேந்திரன் சாதனையை முறியடித்தவுடன் முதலில் வெள்ளிக்கேடயம் வழங்கி பாராட்டுரை நிகழ்த்துவார்.

## வண்டிச் சவாரிப் போட்டி

[நீர்வேலி]

நீர்வேலி வடக்கு இளைஞர் விளையாட்டுக் கழக ஆதரவில் இம்மாதம் 17 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வை சொக்கலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். [அ]

## 6 வது ஆண்டு சாம்பியன்

[நெல்லியடி]

வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி பிரிவில் நடைபெற்ற கரபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 6 வது ஆண்டாகவும் கரவெட்டி "ஸ்பேஸ்" விளையாட்டுக்சழகம் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டது.

பல முன்னணிக் கழகங்கள் மோதிக்கொண்ட இக்கரபந்தாட்ட சுற்றுப்போட்டியை வடமராட்சி தெற்கு-மேற்கு காரியாதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது. [இ]

## பேராதனையில் மருத்துவ கண்காட்சி

### மார்ச் 20-27-ல் நடைபெறுகிறது

[பேராதனை]

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட ஆதரவில் நடைபெறும் மருந்துவகண்காட்சி இம் மாதம் 20-ம் திகதி முதல் 27-ம் திகதி வரை பேராதனையில் இடம் பெறுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் மருத்துவ கண்காட்சித் தொடரில் இது 3 வது ஆகும்.

கடந்த 73-ம் ஆண்டு 2-வது கண்காட்சி நடைபெற்றது. (இ)


## வரி விளம்பரம்

### தேவை

மேசன் ஆட்கள், மேசன் உதவி ஆட்கள் தேவை. கீழ்க்காணும்விலாசத்திற்கு உடனே வரவும். தங்குவதற்கு இடவசதி கொடுக்கப்படும். M. சண்முகம் அன் சன்ஸ், த பிஞன்ஸ் கொம்பனி, புதிய மேல்மாடிக் கட்டிடம், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1898

### பயிற்சி

மத்திய கிழக்கு நாடுகளில் கட்டிட வேலைகளுக்குத் தொழிலாளர் தேவை. Diploma in Building Technology பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது National Institutes 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1892

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor), Auto Electricians Certificate. Diploma In Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம. National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1891

## WANTED

1. A Machinist with experience in lathe work
2. For the foundry a moulder or pattern-maker

Salary scale in range Rs 300 to 600/- p.m. all inclusive, according to experience.
Apply on forms obtainable from
Director,
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE,
Vaddukoddai.
1900

நீர்வேலி வடக்கு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

### மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

இடம்: நீர்வேலி முற்றவெளி மைதானம்
காலம்: 17-3-1979 சனி 2-00 மணி
போட்டிகள் A, B, C என 3 பிரிவுகளாக நடைபெறும்.
பங்கு பற்றுபவர்கள் ரூபா 10-00 கட்டுப்பணம் செலுத்தி பெயர்களைப் பதிவு செய்யவும்.

இப்படிக்கு
நிர்வாகிகள்.
1905

யாழ்ப்பாணம், மன்னார், மாவட்டக் கிராமங்களில் சேவையாற்ற

### முழுநேர ஊழியர்கள் தேவை

கிராமசுகாதாரம், கிராம நிர்மாணம், அலுவலக உதவியாளர், கட்டிட வேலை மேற்பார்வையாளர், சிறுவர் பள்ளி ஆசிரியர், தாய்சேய்நலன் பரிசோதனை நிலையம், நூல்நிலையம், பத்திரிகை நடாத்தல், தமிழ், ஆங்கில தட்டச்சு, கிராமப் புள்ளி விபரங்கள் சேகரித்தல், கணக்காளர், சமையல், இரவுக்காவலாளி, இயற்கை வைத்தியம், ஆங்கில வைத்தியம், சத்துணவு தயாரித்தல், கிராமிய விளையாட்டுகள், தோட்டப்பியாசம், சங்கீதம், பண்ணிசை, நடனம், வயலின், மிருதங்கம் ஆகிய துறைகளில் சிறந்த அனுபவம் பெற்ற ஊழியர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயதுக் கட்டுப்பாடு இல்லை தகுந்த வேதனமும், தங்குமிடவசதிகளும் அளிக்கப்படும்.

சர்வோதய அலுவலகம்,
புங்குடுதீவு.
1901

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குப் பொறியிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரினால் 1979 மார்ச் 23 ஆம் திகதி மு. ப. 10-00 மணி வரைபெற்றுக்கொள்ளப்படும்

1. எல்லைச் சுவர்கள் நிருமாணம் - 2000 நீள அடிகள்.
2. முதற்தர மரத்தில் கிராதி வேலை - 1000 சதுர அடி.
3. பாதுகாப்பு வெளிச்சமிடல் - மூழு எண்ணிக்கை 25 400 வோட்ஸ் (பாதரச வாயுப் பொருத்திகள்)

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "....................................... பொருட்டுக் கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

1979 மார்ச் 16ஆம் திகதி தொடக்கம் மார்ச் 22ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழக்கமான வேலை நேரங்களில் கேள்விப்படிவங்களின் தொகுதி இணைப்படிகளில் இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் அலுவலகத்தில் வழங்கப்படும். இதற்கு மீளளிக்கப்படும் வைப்பாக 100/- ரூபாவும் மீளளிக்கப்படாத வைப்பாக 25/- ரூபாவும் செலுத்தப்படவேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 25,000/- ரூபாவுக்குக் குறையாத வேலையைத் திருப்திகரமாகப் பூர்த்திவாக்கியமைக்கான சான்றை அளிக்கும் ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது வேறு எந்தவொரு பல்கலைக்கழகத்தின் நிருமாண வேலையைச் செய்வதற்காகப் பதிவுசெய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

வேறு தேவையான விபரங்களை நேரடியாகப் பதிவாளரின் அலுவலகத்தில் வழமையான வேலை நேரங்களிற் பெற்றுக்கொள்ளமுடியும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1979-03-08. 1902

### மரண அறிவித்தல்

திருமதி அன்னம்மா அருளானந்தம்

திருமதி அன்னம்மா அருளானந்தம் காலமாகிவிட்டார். இவர் திரு தேவசகாயம்அருளானந்தத்தின்அன்பு மனைவியும் திருமதி மேரி ஜயராணி (ராணி), திரு. விக்டர் இம்மானுவல் [சேவியர் - F. P L] திரு. அன்ரனி யோசேட்பு [ஆனந்தன்], திருமதி மேரி றோசபெல் [ஸ்ரெல்லா] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஞெகேசன் பிரான்சிஸ் [மீன்பிடி லாகா பரிசோதகர்], திரு. பஸ்தியாம்பிள்ளை மரியதாஸ் (உதவித்தபால் அதிபர கொழும்பு), திருமதி மரியசாந்தினி (சாந்தி) ஆகியோரின் அன்பு மாமியாருமாகிய திருமதி அன்னம்மா அருளானந்தம் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் சுண்டிக்குளி காட்டுக்கந்தோர் ஒழுங்கை, 30/1, இலக்கத்திலிருந்து 15-3-79 வியாழகிழமை மாலை 4-30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டுப் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா ஆசனக் கோவில் சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.

அறிவிப்பவர்: ஞெகேசன் யோசேப்பு, அதிபர், அரசினர் றோ. க. க. பாடசாலை, நாவாந்துறை.
1903

# மக்கள் கருத்து

## நல்ல தமிழ் நாவல்களா?

'இந்தியசஞ்சிகைகளைத்தடை' செய்யவேண்டுமென்று எட்டாண்டுகளுக்கு முன்னர் எழுந்த இலங்கை எழுத்தாளரின் ஒரு பகுதியினரின் குரலுக்கு எதிர்க்குரல் கொடுத்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் இன்று கடைகளில் குவிந்து கிடக்கும் இந்திய சஞ்சிகைகளை - மாதாந்த நாவல்களை - பார்க்கும்போது, படிக்கும்போது இவைஒன்றுமே வேண்டாம் என்று கூக்குரல் எழுப்பத் தோன்றுகின்றது

இறக்குமதியாகும் ஒரு ரூபா பெறுமதியான நூல் ஒன்று இங்கே 2-50 அல்லது 3-00 ரூபா விற்கப்படுகின்றது இலங்கை வெளியீடுகளுடன் ஒப்பிடும் போது அவை மலிவாகத் தோன்றுகின்றன வேகமாக விற்பனையாகின்றன. கவர்ச்சியான அட்டைப்படங்கள் இன்றைய இளைஞர்களைக் கவருகின்றன ஆனால் உள்ளடக்கமோ மிக மட்டம்.

ஆங்கிலம் கலந்த உரையாடல் இன்றைய சாதாரண மனிதனின் வாழ்வில் கலந்துள்ள 'கலாச்சரம்' என்பதை வாதமாகக் கொண்டு ஆங்கில வார்த்தைகளை நாவல்களில், தாரளமாக உபயோகிக்கிறார்கள்

சுத்தமான தமிழிலே நாவல்களை எழுதி வெளியிடும் ஈழத்து எழுத்தாளர்களை நோக்கும்போது இந்திய எழுத்தாளரின் அவசர, அலங்கோல, வியாபார நேக்கத்தை எண்ணியே நகைக்கத் தோன்கின்றது.

'மாலைமதி' - 'பெப்ரவரி79' வெளியீடாக வந்தது 'ஏர்-கிராஷ்' எனும் நாவல். தலைப்பே ஆங்கிலத் தமிழ் உச்சரிப்புக் கொலை. முதல் அத்தியாயத்தில் இரண்டாவது வரியிலேயே ஆங்கில உரையாடல்

'கோ பைலட்...'

'கப்டன் ரெடி...'

'ஜஸ்ட் ரென் மினிட்ஸ்...' சிற் டவுண்...ஹாவ் ஏஸ்மோக்

'ஆர்டர் காஃப்பி...'

தவிர்க்க முடியாத இடங்களில் மாத்திரம் அந்நியச் சொற்களை வைப்பதும் அவற்றுக்கு அடைப்புக் குறியிடுவதும் தமிழ்நடை மரபு. இவை ஏதும் இந்த எழுத்தாளருக்குத் தெரியாதோ...?

ஆங்கில நாவல்களைப் படித்துவிட்டு அவைபோல திடீர் திருப்பங்களுடனும் பாலுணர்வுக் கட்டங்களுடனும் நாவல்களை வெளியிடுவதன் மூலம் தமிழ்ப்படாதிபதிகளுக்கு இவை பிடித்துக் கொண்டால் அவர்களிடமிருந்தும் ஒரு தொகையைப் பெற்றுவிடலாம் என்று இந்த எழுத்தாளர்கள் எதிர்பார்க்கிறார்களோ?

ஆங்கிலம் தெரியாதவர்கள் இந்த நாவல்களைப் படித்து விளங்கிக்கொள்ள முடியுமா? ஆங்கிலம்படித்த தமிழருக்கென்றே இவை அனுப்பப்படுகின்றனவா...?

எமது பண்பாட்டுக்கு அந்நியமான கதை, எமக்கு விளங்காத தமிழ் நடை, உரையாடல், ஆங்கிலக் கலப்பு, 'அசிங்கமான' அட்டைப்பட... இத்தனையும் சேர்ந்ததுதான் இந்திய எழுத்தாளரின் இலக்கிய வியாபாரம்.

எமது வெளியீடுகள் இந்தியாவுக்கு ஏற்றுமதியாக அனுமதி கிடைத்துள்ள வேளையில் அங்கிருந்து வருவனபற்றி மூச்சுவிடக்கூடாது என்று எண்ணுவார்களோ? எமது தரமான நூல்களைத் தான் ஏற்றுமதி செய்பவர்கள் வியாபாரிகள். இங்குள்ள 'குப்பை'களையெல்லாம் அனுப்பமாட்டார்கள். இது நிச்சயம். ஆகவே அங்கிருந்து வரும் குப்பைகளைத் தடைசெய்யக் கோருவதில் என்ன பயம்?

எனவேதான், எமது நூல்கள் ஏற்றுமதி விஷயத்தில் முயன்று உழைத்தவர்கள் இங்கு வரும் 'குப்பைகளைத் தவிர்க்க ஒரு தெரிவுக்குழுவை நியமித்து அரசுக்குச் சிபார்சு செய்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். இதனால் இலங்கை எழுத்தாளன் மாத்திரமல்ல தமிழ் வாசகனும் தூய்மையடைவான்.

எஸ்.பி. கிருஷ்ணன்.
மட்டுவில்,

## மீண்டும் வருவாரா?

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இரண்டு வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி வருகின்ற பெண் உதவி வைத்திய அதிகாரி திடீரென இடமாற்றத்திற்குள்ளாகியதையிட்டு முல்லைத்தீவு மாவட்டப் பெருமக்கள் பெரும் அதிர்ச்சியடைந்ததுடன் மிகவும் வேதனைக்குளளாகியுள்ளார்கள். முல்லைத்திவு வைத்தியசாலையில் இதுவரைகாலமும் எந்தவொரு வைத்திய அதிகாரியும் ஆற்றாத சேவையை இவர் ஆற்றி மக்களின் மனதைக் கவர்ந்தவராவர். இவ்வதிகாரியின் இடமாற்றம் நியாயம் அற்றதென மக்கள் புலம்புகின்றார்கள் தன்னலம் பாராது, அன்பாகவும் பண்பாகவும் பழகிச் சொற்ப காலத்தில் இவர் ஆற்றிய சேவையால் முல்லைத்தீவு மாவட்டத்தின் வளர்ச்சி ஒருபடி உயர்ந்துள்ளது. இதை மக்கள் அறிவர். யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு அனுப்பவேண்டியதுகூடும் நோயாளர் கூட இவரது திறமையால் சிகிச்சை அளிக்கப்பட்டு குணம் அடைந்துள்ளார்கள். இப்படியான அதிகாரியின் பூரண சேவை எமது பின் தங்கிய மாவட்டத்திற்குக் கிடைக்கு முன்னர் இவர் திடீர் இடமாற்றத்திற்கு உள்ளாகியது அரசியல் தலையீட்டினாலேயே என இங்கு மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது இப்படியான அரசிய தலையீட்டின் மூலம் எமது மாவட்ட வளர்ச்சி குன்றி நிரந்தரமாகப் பின்தங்கிய மாவட்டமெனப் பெயரெடுக்கும் நிலைக்கு உள்ளாகிறது என்பதை அரசியல் செல்வாக்குள்ளவர்கள் அறிவார்களோ? ஒருசிலரின் சுயநலத்திற்காக எடுக்கும் முயற்சியால் பாமர மக்களும், அப்பாவி அதிகாரிகளும் தாக்கப்படுவதையே நாம் காண்கிறோம். எனவே இவ்வதிகாரியின் இடமாற்றத்தால் விழிப்படைந்த உண்மையான மாவட்ட வளர்ச்சியைக் கண்கொண்டு நோக்கும் மக்கள் ஒவ்வொருவரும் வேண்டுவதெல்லாம் "இவ்வதிகாரி மீண்டும் எம்மத்தியில் சேவையாற்றுவதற்கு மனிதாபிமானமுள்ள உயர் அதிகாரிகள் ஒரு நல்ல முயற்சியை மேற்கொளளவேண்டும்" என்பதேயாகும்

க. வேலன்
முல்லைத்திவு.

## இளைப்பாறினார்

(சாவகச்சேரி)

கிளாலி சென் மேரிஸ் வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய திரு எஸ். மரிய பிள்ளை அந்தோனிப்பிள்ளை கடந்த மாதம் 28-ந் திகதியுடன் பதவியிலிருந்து இளைப்பாறியுள்ளார் இவர் தமது ஆசிரியப் பணியில் 32 ஆண்டுகள் மணற்காடு, பெரியவிளான், கரையூர், வலப்பாடு, தாளையடி, தவசிக்குளம், கிளாலி ஆகிய இடங்களில் பணி புரிந்துள்ளார்

[இ]

# மாற்றாரின் பாசறையில் மண்டியிடுவோர் பரமஏழைகளா?

## 'இராசு'வுக்கு பண்டிதர் கேள்வி

[யாழ்ப்பாணம்]

"திரு. இராசதுரை தேர்தல் முடிந்தபின் தனிவழியில் செல்கிறார்" எனவும் "தமிழர்விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்துடன் சேரப்போகிறார்" எனவும் "இராசதுரை கூட்டணியிலிருந்து இராஜினாமா" எனவும் பத்திரிகைளில் முன்னர் வெளிவந்த செய்திகளைத் தாமே மறுக்காத திரு இராசதுரை... கூட்டணியிலிருந்து ராஜினாமா" எனவும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைத் தாமே மறுக்காத திரு. இராசதுரை இப்பொழுது தமக்கு மாறாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகளை மறுக்கவில்லையே!" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பு நிருவாகச் செயலாளர் பண்டிதர் கா பொ இரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை மேலும் கூறுவதாவது!

"திரு இராசதுரை தமது தனிப்போக்கை மறைப்பதற்குக் கற்பனைசெய்வதுபோலத் தமிழர்விடுதலைக் கூட்டணி எவ்வகையிலும் அவரைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கத் திட்டமிடவில்லை; சதிசெய்யவில்லை, மாறாக அவரை மதித்துக் கூட்டணியுடன் இறுக்கச் சேர்ப்பதற்கே முயன்றுள்ளது தேர்தல் முடிந்தபின் தனிவழியில் சென்ற அவரை 24-6-78ல் மட்டக்களப்பில் நடந்த மத்தியசெயக்குழுக் கூட்டத்திற்குச் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கமும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அவர் இருந்த இடத்திற்குச்சென்றுஅழைத்து வந்ததை அவர் மறந்துவிட்டாரா?

"24-6-78ல் நிறைவேற்றப்பட்ட தமிழர்விடுதலைக்கூட்டணியின் அமைப்புவிதிகளின் படி வவனியாவில் 15-78ல் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் திரு இராஜதுரையின் 30 வருடத் தொடர்பை மதித்து அவரைப் பொதுக்குழு போட்டியின்றிக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவராகத் தெரிவுசெய்ததை அவர் மறந்துவிட்டாரா? இது தேர்தல் முடிந்து ஓராண்டின் பின்தானே நடந்தது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழு அவருக்கு மூன்றாவது இடத்தையும் அதாவது எதிர்க்கட்சி முதல்வருக்கும் கூட்டணியின் தலைவருக்கும் அடுத்த இடத்தையும் இருக்கையையும் கொடுத்துக் கௌரவிக்கவில்லையா?

"வேறுசில பாராளுமன்ற உறுப்பினர்களும், கட்சியின் கொள்கைக்கு மாறாகப் பேசினார்கள்; கேள்வி எழுப்பினார்கள் என்று நடந்தது ஒன்றும் அறியாத குழந்தை போல திரு இராசதுரை கூறுகிறார். அவரை விளக்கம் தருமாறு கேட்பதைப் போலவே வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்களும் விளக்கம் தருமாறு கேட்கப்பட்டார்கள் என்பதை அவர் மீண்டும் மீண்டும் மறந்துபேசுவதன் மர்மம் யாது? அவர் குறிப்பிடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் பணிப்புக்கு உட்பட்டுத் தங்கள் விளக்கங்களை அவர் குறிப்பிடும் உரியநேரத்தில் கொடுத்தனர். இவ்வாறு திரு. இராஜதுரை செய்யவில்லையே! இப்பொழுது பழம் பத்திரிகைகளைக் கிளறிஎடுத்து அறிக்கைகள் விடும் திரு இராசதுரை, தமது விளக்கத்தை நூறு நாட்கள் வரை அனுப்பாது இருந்து கட்சியை அவமதித்த பின் தம்மை அவர்களுடன் ஒப்பிடுவது எப்படிப் பொருந்தும்?

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உறுப்பினர்களைச் சேர்த்து அவர்களின் உறுப்புரிமைப்பணத்தையும் பெற்று அனுப்புமாறு தொகுதிஅமைப்பாளர்களான பாராளுமன்ற உறுப்பினர்களை மத்திய செயற்குழு பணித்தது. மட்டக்களப்புத்தொகுதி அமைப்பாளரான திரு இராசதுரை பா உ இன்றுவரை ஓர் உறுப்பினரையும் சேர்க்கவில்லையே! ஆனால் அவர் குற்றம்காணமுயலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏனையோர் ஆயிரக்கணக்கில் உறுப்பினரைச் சேர்த்து உறுப்புரிமைப் பணமாக ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பெற்று அனுப்பியுள்ளனரே!

"தொகுதிதோறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூலக்கிளைகளை நிறுவுமாறு எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பணிக்கப்பட்டனர் திரு இராசதுரை ஒரு கிளையையும் நிறுவவில்லை, ஏனையோர் நிறுவியுள்ளனர் இது குறித்து திரு இராசதுரைக்கு 17-9-78ல் அனுப்பப்பட்ட கடிதத்தில் மட்டக்களப்புத் தொகுதி தலைமை அமைப்பாளர் என்றமுறையில் தங்கள் தொகுதியில் கிளைகளை ஒரு மாதத்திற்குள் நிறுவி முடித்து, விபரங்களை தலைமை செயலகத்துக்கு அறிவிக்க வேண்டுமென்றும், தவறின் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் 16-9-78ல் யாழ்ப்பாணத்தில் கூடிய மத்திய செயற்குழுவின் எச்சரிக்கைத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது" மத்தியசெயற்குழுவின் இந்த எச்சரிக்கையையும் அவர் பொருட்படுத்தவில்லை.

"திரு இராசதுரை குற்றம் காணும் பாராளுமன்ற உறுப்பினர்கள்; மத்தியசெயற்குழுக் கூட்டங்களுக்கு வருகை தந்தனர் அவரே கூறுவதுபோல 21-7-77க்குப் பின் திரு இராசதுரை ஒரு வருடகாலத்துக்கு மேலாகச் செயற்குழுக் கூட்டங்களுக்கு சமூகம் அளிக்கவில்லை. 1977 யூலை 21 பொதுத்தேர்தலின் பின் ஓராண்டு வருடகாலத்திற்கு மேலாக செயற்குழுக் கூட்டத்திற்கு வராத தம்மீது அப்பொழுது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்று திரு. இராசதுரை கேட்கிறார். பொதுத்தேர்தலின் பின் ஓராண்டுகழித்து 24-6-78 இல் நிறைவேற்றப்பட்ட கூட்டணியின் அமைப்பு விதிகளின்படி அதற்கு முந்திய காலத்தில் அவர் செயற்குழுவுக்கு வராதிருந்ததிற்கு நடவடிக்கை எடுக்கவில்லையே எனும் அவருடைய விநோத கண்டுபிடிப்பு வடிகட்டிய முட்டாள் வாதத்துக்கு நல்ல உதாரணமன்றோ அப்பொழுது அவர் சிரேட்ட துணைத்தலைவராயிருக்கவில்லையே அப்பொழுது ஆக்கப்படாத சட்ட விதிகள் அவரைப் பொறுத்தவரை இருகண்களையும் தூங்கிக் கொண்டு முடியது எப்படி? இதைவிடப் பெரிய சப்பைக்கட்டுவாதம் உண்டா?

கட்சியுடன் முப்பதாண்டு தொடர்புடைய திரு. இராசதுரை பாராளுமன்றக் குழுவில் மூன்றும் இடத்தைப் பெற்ற திரு. இராசதுரை தேர்தல் முடிந்தபின் அரசாங்கத்தை கண்டித்தும் கட்சியின் கொள்கைகளை வற்புறுத்தியும் அவர் குறிப்பிடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முழங்கியதைப்போல இன்று வரை பாராளுமன்றத்தில் மூன்று வார்த்தைகள் கூடப் பேசவில்லையே ஏன்?

கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து கண்ணியமாகத் தங்கள் கடமைகளைச் செய்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளாத திரு. இராசதுரை தம்மை ஒப்பிட்டு வாதிப்பது இரட்டைச் சப்பைக்கட்டுவாதமன்றோ?.

"கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் இருவர் அரசாங்கத்தில் சேரப்போகின்றார்கள் என்றும், இவர்களுக்கு உதவுதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவோம் என்றும் அதி உத்தம சனாதிபதி டெல்லிமாநகரிலும், சென்னையிலும் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினார் இக்கூற்று பத்திரிகைகளில் வெளிவந்தவுடன் திரு. கணேசலிங்கம், பா. உ., அரசாங்கத்தில் எச்சூழ்நிலையிலும் எக்காலத்திலும் சேரமாட்டேன் என்று பத்திரிகைகளில் அறிக்கைவிட்டார். ஆனால் திரு. இராசதுரை பா. உ அப்படி ஓர் அறிக்கையைத்தானும் வெளியிடாமல் மௌனம்சாதித்தார் அந்த மௌனத்திற்குக் காரணம் என்ன என்பதை இன்று உலகம் முழுவதும் அறிந்துவிட்டதே! அரசாங்கத்துடன் சேருதற்கு முயன்ற கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் யார் யார் என்று மக்கள் கேட்டார்கள்; இப்பொழுது யார் என்பதை திரு இராசதுரை எல்லா மக்களும் அறிதற்கு வாய்ப்பளித்துவிட்டார், விரைவில் அமைச்சராகப் போகும் இராசதுரை ஐயாவிடம் ஒரேயொரு கேள்வி?

"மாற்றாரின் பாசறைக்குள் சென்று மண்டியிட்டு வாழமுற்படுபவர் பரம ஏழையா? பச்சோந்தியா? பச்சைத் துரோகியா? [கொக். நிரு]

# தவக்கால நற்சிந்தனை

"கிறிஸ்துவினுடைய செங்கோன்மை எனும் சக்கரப் கால அளவைக் கடந்து நித்தியத்துக்கும் விரைந்து செல்லுகிறது. இறந்த காலமும் எதிர்காலமும் அவருக்கு ஒன்றுதான்."

—நெப்போலியன்

இந்தப் பெருமைவாய்ந்த கால அளவை, யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கிறிஸ்து ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் பொருந்தாது. கி. மு.—கி பி என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கால நிர்ணயம் மனித சமுதாயம் வாழ்கின்றவரைக்கும் இருந்தேதிரும்.

தெய்வத்துள் தெய்வமாக இருந்த அவர், மனிதருள் மனிதராகவும் உலகில் வாழ்ந்தார் என்பதிலிருந்து அவர் பிறப்பதற்கு முன்னும் ஒரு வாழ்க்கை - தெய்வீக வாழ்க்கையாக பரிமளித்தது என்பதைப் பல தீர்க்கதரிசிகள் உறுதியாகக் கூறிய வார்த்தைகளிலிருந்து நமக்குப் புலனாகிறதல்லவா?

—ஞானஒளி:

தொகுப்பு: வில்பிறெட்

# வியட்நாமுக்கு உதவி அளிக்க சோவியத் யூனியன் தயங்காது

## பிரஷ்னேவ் மீண்டும் உறுதி

மாஸ்கோ, மார்ச் 14
வியட்நாமுக்கு உதவியளிக்கச் சோவியத் யூனியன் என்றுமே தயங்காதென்று சோவியத் அதிபர் திரு. பிரஷ்னேவ் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

மாஸ்கோவுக்கு விஜயஞ் செய்த வியட்நாம் இராணுவ உயர் அதிகாரி ஒருவருக்கு அளித்த வரவேற்பு வைபவத்தில் பேசுகையிலேயே திரு. பிரஷ்னேவ் மேற்கண்டவாறு கூறினார்.

சீனாவின் புதிய தூண்டுதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் எதிராக வியட்நாம் எடுக்கும் நடவடிக்கைகளுக்குச் சோவியத் யூனியன் சகல வகைகளிலும் உதவி அளிக்குமென்றும் அவர் கூறினார்.

வியட்நாம மக்களின் வீரத்தினாலும், வியட்நாமியருக்குக் கிடைத்த உலக மக்களின் ஆதரவினாலுமே சீனப்படைகள் தாம் ஊடுருவிய வியட்நாம் பிரதேசத்திலிருந்து வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதென்றும் திரு. பிரஷ்னேவ் கூறினார். [இ]

# "ஆக்கிரமிப்பை சீன கைவிட வேண்டும்!"

## உலக சமாதான கவுன்சில் கோரிக்கை

ஹெல்சிங்கி, மார்ச் 14
"ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பங்குப்பறச் சீன மக்கள் மறுக்கவேண்டும். ஆக்கிரமிப்பை நிறுத்தச் சகல பிரயத்தனங்களையும் சீன மக்கள் மேற்கொள்ளவேண்டும். உலக சமாதான சக்திகளுடன் கைகோத்து நிற்கவேண்டும்" என்று உலக சமாதானக் கவுன்ஸில் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியப் பிரமுகர் ரோமேஷ் சந்திராவை தலைவராகக் கொண்ட இச்சமாதானக் கவுன்ஸில், சகல தேசிய, சர்வதேசிய ஸ்தாபனங்களும் வியட்நாமின் நிர்க்கதியை உணர்ந்து பொதுஜன ஆதரவைத் திரட்ட முன்வரவேண்டும். தமது அரசுகளை வியட்நாமுக்கு ஆதரவளிக்க நிர்ப்பந்திக்கவேண்டும் என்று கோரியுள்ளது.

"பரிபூரண சுயாதிபத்தியம் வாய்ந்த வியட்நாம் மீது சீன இராணுவம் கட்டவிழ்த்துள்ள ஆக்கிரமிப்பு உலகம் பூராவும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கிலேசத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்துடன் ஸ்தம்பித்துவிட்ட போர் அல்ல. இது ஒரு உலக மகாயுத்தத்திற்கு வித்திடக்கூடிய பாரதூரமான ஆக்கிரமிப்பாகும் என்று உலக சமாதானக் கவுன்ஸில் கண்டித்துள்ளது.

ஆக்கிரமிப்பு உடனடியாக கைவிடப்படவேண்டும். வியட்நாம் மண்ணிலிருந்து சகல சீனத் துருப்புகளும் வாபஸாகவேண்டும். வியட்நாம் நாட்டின் சுயாதிபத்தியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் கௌரவிக்கவேண்டும் என்று சமாதானக் கவுன்ஸில் அறிக்கை சீனவிடம் கோருகிறது.

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)
கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 709-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**06 Y 0003**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**12 X 0071**
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
**13 D 0209**
ரூபா 10,000

1513 ரூபா 14 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 05 A 0038 | 21 A 0228 |
| 21 A 0722 | 23 A 0908 |
| 12 B 0144 | 12 B 0634 |
| 31 B 0210 | 24 B 0479 |
| 01 C 0518 | 04 C 0714 |
| 13 C 0448 | 30 C 0301 |
| 03 D 0816 | 04 D 0884 |
| 10 D 0786 | 19 D 0014 |
| 28 D 0699 | 01 E 0109 |
| 22 E 0296 | 03 F 0928 |
| 05 F 0241 | 05 F 0290 |
| 10 F 1000 | 14 F 0695 |
| 16 F 0202 | 17 F 0356 |
| 21 F 0488 | 11 G 0972 |
| 13 G 0482 | 15 G 0271 |
| 16 G 0277 | 19 G 0450 |
| 27 H 0669 | 30 H 0928 |
| 08 J 0766 | 01 K 0370 |
| 10 K 0701 | 12 K 0674 |
| 23 K 0725 | 29 K 0146 |
| 18 L 0517 | 06 M 0320 |
| 19 M 0659 | 20 M 0275 |
| 28 M 0676 | 28 M 0825 |
| 31 M 0018 | 31 M 0891 |
| 15 N 0605 | 17 N 0802 |
| 19 N 0676 | 28 N 0893 |
| 05 O 0221 | 17 O 0442 |
| 22 O 0262 | 03 P 0015 |
| 07 P 0274 | 10 P 0418 |
| 13 P 0119 | 15 P 0665 |
| 15 P 0756 | 17 P 0757 |
| 19 P 0559 | 32 P 0236 |
| 04 Q 0807 | 11 Q 0332 |
| 19 Q 0316 | 26 Q 0202 |
| 05 R 0217 | 16 R 0660 |
| 20 R 0636 | 29 R 0267 |
| 03 T 0950 | 04 T 0135 |
| 13 T 0555 | 19 T 0848 |
| 15 U 0108 | 26 U 0885 |
| 28 U 0996 | 18 V 0137 |
| 26 V 0933 | 30 V 0997 |
| 31 V 0968 | 02 W 0538 |
| 06 W 0050 | 06 W 0798 |
| 14 W 0177 | 16 W 0937 |
| 24 W 0967 | 09 X 0790 |
| 11 X 0064 | 19 X 0600 |
| 27 X 0044 | 05 Y 0178 |
| 14 Y 0838 | 16 Y 0553 |
| 20 Y 0695 | 21 Y 0610 |
| 08 Z 0328 | 09 Z 0828 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

# இன்றைய பலன்

பங்குனிமாதம் 1-ம் திகதி
(15-3-1979)
வியாழக்கிழமை

**மேடம்:** அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், தொழிலில் தளர்ச்சி ஏற்படும், பிரயாணத்தைத் தவிர்க்கவும.

**இடபம்:** இதயத்திற்கு இதம் தரும் செய்தியொன்று கிடைக்கும், உன்வீட்டிலேயே குதூகலம் தோன்றும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் மறைவதற்கு இடமுண்டு.

**மிதுனம்:** வாழ்க்கையில் வளமான திருப்பம் ஏற்படும், சிலர் புதுமனை கட்டுவதற்கும் யோசனை செய்வர், தொழிலிலும் முன்னேற்றம் காணப்படும்.

**கடகம்:** பிறபொருள் வரவுக்கும் இடமேற்படும், சகோதர வழியாலும் மகிழ்ச்சி கிடமுண்டு, எதிர்ப்புக்களும் மறையும்.

**சிங்கம்:** எதிலும் மந்தநிலை காணப்படும், வீண்செலவுகளுக்கிடமேற்படும், உடல் நலமும் பாதிக்கப்படும், கட்டுப்பாடு அவசியம் தேவை.

**கன்னி:** குடும்பத்தில் அமைதி குன்றும். பூமிப் பிணக்குகளால் கவலைகள் உருவாகும். அவப் பெயருக்கும் இடமுண்டு.

**துலாம்:** குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு. சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

**விருச்சிகம்:** அறவழியில் நாட்டம் பிறக்கும், குறுக்கு வழிகளில் இறங்க வேண்டாம், வீட்டில் சிறு பிணக்கும் இடமேற்படும்.

**தனுசு:** மாதுருவழிப் பெருமைக்கிடமுண்டு. கல்வியில் சிறப்புக்கிடமுண்டு, தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும்.

**மகரம்:** உறவினர் வருகை உவகை தரும், புத்திரசுகத்துடன் தொழில்துறையில் வெற்றி கிட்டும், சுபதினம்.

**கும்பம்:** எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும், திரைமறைவில் சதிகள் நடைபெறும், சிலருக்கு அன்னியவாசமும் இடம் பெறும்.

**மீனம்:** வாழ்க்கையில் தென்றல் வீசும். இடப்பிரிவுக்கும் இடமேற்படும. குடும்பம் இன்று கலைக் கோயிலாக மாறும். வரவேற்கவேண்டிய நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# கார்ட்டரின் யோசனை சதாத் ஏற்றுக்கொண்டார்

## கார்ட்டர் மகிழ்ச்சி

வாஷிங்டன், மார்ச். 14
மத்திய கிழக்கு அமைதி தொடர்பான தமது யோசனைகளை எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்தார்

ஆறு நாள் மத்திய கிழக்கு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னரே திரு. கார்ட்டர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமது மத்திய கிழக்கு விஜயத்தின் பயனாக அங்கு நிரந்தர அமைதி ஏற்படக்கூடிய விகையில் புதிய ஒப்பந்தம் ஒன்று விரைவில் கைச்சாத்திடப்படும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# கார்ட்டரின் மத்தி. விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

தெஹ்ரான் மார்ச் 14
மத்தியகிழக்கு அமைதி குறித்து அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டரின் மத்திய கிழக்கு விஜயத்தைக் கண்டித்து நேற்று ஈரானில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. [இ]

# பிரான்சில் பதின்மூன்று அரை லட்சம் பேருக்கு வேலையில்லை

13 லட்சம் 50 ஆயிரம் பேர் பிரான்சில் வேலையற்றிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

# கிறனடாதீவில் எதிர்க்கட்சி தலைவரிடம் ஆட்சிப்பெறுப்பு

## புரட்சி சதியின் எதிரொலி

நியூயோர்க், மார்ச். 14
கரிபியன் தீவான கிறனடாவில் இடம்பெற்ற சதிப்புரட்சியை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. மொரிஸ் பிஷப் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.

புரட்சியை அடுத்து நியூயோர்க் சென்று அங்கு தங்கியுள்ள கிறனடாவின் பிரதமர் சேர் எறிக் ஹரியை உடன் நாடு திரும்புமாறு புதிய ஆட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகால ஆட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறிய செயல்கள் விசாரணை செய்வதற்காகவே நாடு திரும்புமாறு சேர் எறிக்குக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [இ]

# அணிசேரா நாடுகள் கோரிக்கை

நியூயோக், மார்ச் 14
கைப்பற்றப்பட்ட அரபு மண்ணில் குடியேற்றங்கள் அமைக்கும் இஸ்ரேலின் முயற்சிக்கு எதிராக ஐக்கியநாடுகள் சபைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஐநாவில் அங்கம் வகிக்கும் அணிசேரநாடுகள் ஐநாவைக்கோரியுள்ளன.

இஸ்ரேலிய குடியேற்றம் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஐ நா பாதுகாப்புச்சபை அணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும என்றும் அணிசேராநாடுகள் கோரியுள்ளன. [இ]

# தூக்கிலிடுவதை உடன் நிறுத்துக

தெஹ்ரான் மார்ச், 14
ஈரான் மன்னர் ஷாவின் ஆட்சியின் உயர்அதிகாரிகளையும் ஆதரவாளர்களையும் தூக்கிலிடுவதை உடன் நிறுத்துமாறு சமயத்தலைவர் அயதொல்லா கொமேனி உத்தரவிட்டுள்ளார்.

# புதிய சட்டத்தரணிகள்

(கொழும்பு)
கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சட்டத்தரணிகளுக்கான இறுதிப்பரீட்சையில் தமிழ்மொழி மூலம் தோற்றிச் சித்தியடைந்த சட்டத்தரணிகள் வருமாறு:

### முதலாம் வகுப்பில் திறமைச் சித்தி

செல்வி மோகாந்தி அந்தோனியட் மல்திதேவி செல்வரத்தினம், செல்வி உமாவதி துரைசிங்கம், திரு ராமலிங்கம் சக்கரவர்த்தி கருணாகரன்.

### இரண்டாம் வகுப்பில் சித்தி

செல்வி தயாளினி ஆறுமுகம், செல்வி சரிமலா சுவேந்திரனி அஸ்பெறி, செல்வி குமுதவல்லி கணேசராசா, ஜனாப் சாய்புதம்பி லெப்பை மொகொமெட் காலிது, திரு. அருணாசலம் சந்திரசேகரம் குமாரகுரு, செல்வி மாலினி இராசரத்தினம், திரு கதிரேசு சிவசுப்பிரமணியம், திரு சுந்தரம் சிறீஸ்கந்தராசா, திரு இரத்தினவடிவேலு சுரேந்திரன், திரு. பொன்னையா சுவர்ணராசா நாகூபன் தம்பிமுத்து, ஜனாப் முகமது யூசுப், ஜனாப் முகமது தௌபீக். [இ]

# 18 அடி பனிப்பறை

காஷ்மீர், மார்ச் 14
ஜம்மு காஷ்மீர் பகுதியில் 18 அடி உயரத்திற்கு பனி உறைந்திருக்கிறது என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# வர்த்தகர்களுக்கு ஆலோசனை

(நெல்லியடி)
நெல்லியடிப் பகுதி வர்த்தகர்களுக்கு விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கூடிய வர்த்தகர்களுக்கு விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. வேல்முருகு ஆலோசனை வழங்கினார்.

வர்த்தகர்கள் விலைப்பட்டியல் வைத்திருத்தல் வேண்டும் கலப்படம் செய்யக்கூடாது, பதுக்கல் கூடாது, தரமான பொருட்களை விற்பனைசெய்ய வேண்டும். பொதுமக்களை கட்டாயப்படுத்தி பொருட்களை விற்பனை செய்யக்கூடாதெனப் பல ஆலோசனைகளை அவர் வழங்கினார்.

# "பேச்சைவிடுத்து செயலில் இறங்கும் காலம் வந்துவிட்டது"

## வட்டு. எம். பி. அறைகூவல்

(சித்தன்கேணி)

"சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கசமாஜம் புதிய நிர்வாகத்தின் கீழ் நாலரைலட்சம் ரூபா லாபமீட்டியது இப்பணத்திற்குச் சங்கானைப் பகுதியில் விரைவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள மூன்றுபலநோக்குக்கூட்டுறவுச்சங்க சமாசங்களும் அதிகலாபம்ஈட்டியுள்ளன. பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம்அச்சுவேலியில்இரண்டு தொழிற்சாலைகளை நிறுவி எமது தொகுதியிலுள்ள 300 வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளித்திருக்கிறது. பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கசமாசம் எமது தொகுதியிலுள்ள மற்றையசங்கங்களிலும் பார்க்க முன்னணி வகிக்கிறது."

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினர்.

இக்குழுக் கூட்டம் சித்தன் கேணி பணிமனையில் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் பேசும் போது கூறியதாவது: "ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் எதிர்க்கட்சியில் இருந்து அரசு என்னைத் தெரிவுசெய்து ஜப்பானுக்கு அனுப்பவுள்ளது. நான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் தொழிற்சாலைகளை அமைப்பதற்கேற்ற முடிவுடன்தான் நிச்சயமாக இங்கு திரும்பிவருவேன்.

"நாம் எமது அசைக்கமுடியாத தமிழ் ஈழத்தை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளில் மிகத் தீவிரமாக எமது கிளைகளின் மூலம் ஈடுபடவேண்டும். இன்னும்இரண்டு மாதங்களுக்குள் எமது கிளைகளுக்குரிய புதிய நிர்வாகிகள்தெரிவு அந்தந்தக் கிராமங்களில் நடைபெறவிருக்கிறது. மக்களுக்கு பொதுநல நோக்குடனும் மிகத் தீவிரமாகவும் செயலில் இறங்கக்கூடியவர்களையும் எமது புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்ய வேண்டும். நாம் பேச்சைக் குறைத்து செயலில் இறங்க வேண்டியகாலம் வந்துவிட்டது. எமது தொகுதியிலுள்ள கிராமங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டுக்குக்கீழ் இயங்கும் தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகளை அமைப்பதற்கேற்ற நடவடிக்கைகளில் கிளை நிர்வாகிகள் ஈடுபடவேண்டும்.

இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கிளைகளின் தலைவர், செயலாளர்களும், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்கள். [இ]



[வசாவிளான்]

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றத்தின் தலைவராக திரு. ச. சிறீகுகன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரிய கலாசாலையின் 1978 ன் சிறந்த விளையாட்டு வீரரான இவர்; வசாவிளான் "சைனிங்ஸ்டார்" விளையாட்டுக் கழகத்தின் உள்ளக விளையாட்டுத் தலைவராகவும் வலவை கலை கலாச்சார ஒன்றியத்தின் பிரதம அமைப்பாளராகவும் கடமையாற்றுகிறார், இவர் மகாஜனக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவர்.

## இவர்களின் சம்பளம் அதிகரிப்பு

[நீர்வேலி]

வலி. கிழக்குத் தென் பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு, அதன் தலைவர் திரு வ. நடேசலிங்கம் தலைமையில் கூடியபோது அரசாங்கத்தின் புதிய திட்டத்திற்கமையவும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைவாகவும் பணியாளர்களின் சம்பளத்துடன் ரூபா ஐம்பது கூட்டிக் கொடுப்பதென தீர்மானித்துள்ளது. இச்சம்பள அதிகரிப்புக்காக சங்கப் பணிப்பாளர்கள் நெறியாளர் குழுவுக்கு நன்றியைத் தெரிவித்தனர். [க]

## மேல் நீதிமன்ற விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ். மேல் நீதிமன்ற விசாரணை இம்மாதம் 19-ந் திகதி நடைபெறும். [க]

## சிறுகதைப் போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

ஹெம்மாதகம முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன

முதற்பரிசு: சாவலூர் எஸ். ஜெகநாதன் (உனை ஏன் அழைத்து வந்தேன். இரண்டாவது பரிசு: திக்குவலை கமால் (காலப் புயலில் ஒரு விளக்கு) மூன்றாவது பரிசு: எம். ஏ. எம். ஏ வாஹிது (ஓர் ஏழையின் இதயம் அழுகிறது)

இப்போட்டியில் முதற்பரிசைப் பெற்ற சாவலூர் எஸ். ஜெகநாதன் கடந்த மூன்றாண்டுகளிலும் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் பதின்மூன்று பரிசில்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. [கு]

## பிரசவவிடுதிக்கு மின்சாரம்

[சாவகச்சேரி]

கொடிகாமம் அரசினர் பிரசவவைத்திய சாலைக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதன் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு வருகின்றன. மின்சாரப்பகுதியினர் துரிதமாக வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். [ஆ]

## வெற்றி தோல்வி இல்லை

[அரியாலை]

யாழ். பரி. யோவான் கல்லூரிக்கும், யாழ் இந்துக்கல்லூரிக்குமிடையில் இந்துக்கல்லூரி மைதானத்தில நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பாடிய பரி. யோவான் கல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது. டி. எம். இரத்தினராசா, ஈ. ரி. தஞ்சரத்தினம், டீ. எம். ரவீந்திரா, என்போர் முறையே 68, 45, 43 ஓட்டங்களைப் பெற்றனர். ரி. ரவீந்திரா 73 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், எஸ். ரி. ஏ. அசோக்குமார் 65 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய இந்துக்கல்லூரிக் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. கே. விஜயகுலசிங்கம் எஸ். சுபேந்திரன் என்போர் முறையே 49, 47 ஓட்டங்களைப் பெற்றனர். ஈ. ஜே. ஜெயரத்தினம் 52 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்துக்கல்லூரி ஆட்ட முடிவில் 9 விக்கட்டுகளை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. ஏ பசீல் ரி ரவீந்திரன் என்போர் முறையே 69, 42 ஓட்டங்களைப் பெற்றனர். எஸ் கே பாலகுமார் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றுர். எஸ் தனஞ்சயன் 100 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்

## அத்தியார் இந்து பொன்விழாக் கொண்டாடும்

[நீர்வேலி]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் 50 வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு அடுத்த மாதம் பொன் விழாக் கொண்டாடுவதெனக் கல்லூரி பெற்ருர் - ஆசிரியர் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் தீர்மானித்துள்ளன:

பொன்விழா நினைவு மண்டபம் அமைத்தல், புதிய நூல் நிலையம் ஒன்று அமைத்தல் என்பன விழாவையொட்டி நடைபெறவுள்ளன.

மேலும் கல்லூரியில் க. பொ. த. விஞ்ஞான உயர்தர வகுப்பு அமைப்பதுபற்றிக் கோப்பாய் எம். பி., கல்வி அதிபதி ஆகியோரை நேரில் கண்டு பேசுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. க. இராசரத்தினம் தலைமையில் கூடிய கூட்டத்தில் விழா மலர் ஒன்று வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. [ஆ]

## இருநூறு...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

இப்படியாக ஒவ்வொரு பத்திரிகைகளும், சாதனைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும். பத்திரிகைகள் தமது பணியைச் சிறப்பாகச் செய்யுமானல், நொண்டியும் எழுந்து நடப்பான் என்று சொல்லலாம், 'ஈழநாடு' பத்திரிகையை ஒவ்வொருநாளும் காலையில் அடிக்கொண்டே படித்துவருகின்றேன் அந்த அளவுக்கு, என் நெஞ்சோடு நெஞ்சாக "ஈழநாடு" கலந்துவிட்டது. "ஈழநாடு"வின் சக ஊழியர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்" என்று விடைபெறுகின்ருர் ஜனாப் பரீத் நஸீர்.

## பண்ணை மார்க்கட் திறக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பண்ணை மார்க்கட் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பண்ணை மார்க்கட் வியாபாரிகள், வேறிடம் சென்றிருந்ததால், மார்க்கட் கடந்த சில வாரங்களாக மூடப்பட்டிருந்தது

[6-ம் பக்கம் பார்க்க]


RIO (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Shadow Man
Murder—Misery

நாகம்ஸ்
[சுன்னுகம்]
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
லக்ஷ்மி
ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள்

மனோகரா
[யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
பேசும் தெய்வம்
[புதிய பிரதி]

11-வது வாரம்
வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி சில தினங்கள்
ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 10-30, 2-15, 615&9-45
சிவாஜி-வரலட்சுமி
நான் பெற்ற செல்வம்
(புதிய பிரதி)

கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ராணி
[யாழ். நகர்]
முத்துராமன்-பிரமிளா
ஜெய்சித்ரா-ராகவன்
வாழையடி வாழை

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா நடித்த
தெய்வமகன்
[புதிய பிரதி]

REGAL
(Jaffna)
Daily 5 Shows
10-30 a m., 2-00, 4-30, 7-00 & 9-30 p. m only
JEAN PAUL - BELMONDO in
THE HUNTER (color)
(Spy film)
த ஹன்ரர்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி; 2-00, 6-00&9-30
சனி, ஞாயிறு: 10-00, 2-00 6-00 & 9-30
ஜெய்சங்கர்—லக்ஷ்மி
ராணி யார் குழந்தை
(புதிய பிரதி)

லிடோ
[யாழ் நகர்]
போன்: 7638 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

கடைசித்தினம் 18-3-79
சாந்தி
போன்: 7642
யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜீற்றேந்திரா - ஜெயபாதுரி - பிரான்
"பரிச்சே" - ஹிந்தி - ஈஸ்ட்மன் கலர்
17-3-79 காலை 10-30 க்குமட்டும் 'நிதியுதவிக் காட்சி'
ஆடிப்பெருக்கு
19-3-79 THE GIPSY CAMP VANISHED in to the BLUE

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—மாலினி
சபாஷ்மீனு

# பெற்றோரின் சுயநலம் கல்வியைப் பாதிக்கலாகாது

## எதிர்க்கட்சித் தலைவர் விருப்பம்

[மாவிட்டபுரம்]

"பெரிய கல்லூரிகளில்தான் தமது பிள்ளைகள் ஆரம்பம் முதல் படிக்கவேண்டுமென எல்லாப்பெற்றோர்களும்நினைத்தால் ஆரம்ப பாடசாலைகளை நடத்துவதால் பயனில்லை. பிள்ளைகள் கல்விகற்க வேண்டுமென்பதுதான் அவசியமே தவிர அவர்கள் எங்கே கல்வி கற்கிறார்கள் என்பது அவசியமில்லை. ஒருபுறம் ஆட்சியாளர்களின் அநீதியான நடவடிக்கைகளும், மறுபுறம் நமது பெற்றோர்களின் சுயநலப் போக்கும் நமது வருங்காலச் சந்ததியின் கல்வித்துறையை எவ்வளவுதூரம் பாதிக்குமென்பதை நாம் உணரும் நாள் வெகுதூரத்திலில்லை".

இவ்வாறு பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை புதியகட்டிட திறப்புவிழாவில் பிரதமஅதிதியாக கலந்துரையாற்றிய காங்கேசன்துறை எம். பி. யும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான பொருட்காட்சியையும் பார்வையிட்டபின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து அதிபர் திரு. பொன்னையா தலைமையில் நடந்தவிழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

இப்பகுதியின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக கல்வியதிபதிகள், அதிபர்கள், கல்விப்பிரமுகர்கள் ஆகியோரைக் கூட்டி மகாநாடு ஒன்றை நடத்தி அதில் நல்ல முடிவுகளை எடுத்து செயல்படுத்தினோம். அதன்படியேதான் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியிலும் 1ம் வகுப்பை நிறுத்த முடிவு எடுத்தோம். மகாஜனாவில் 2500 பிள்ளைகளுக்கு மேல் பயிலுகிறார்கள். பிள்ளைகளது தொகை ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருந்தால் தான் கல்வி விருத்தியடையும் என்பதால்தான் அங்கு 1ம் வகுப்பை நிறுத்தமுயன்றோம். ஒரு கல்லூரியில் 1000 மாணவர்கள் என்ற கட்டுப்பாடு இருந்தால்தான் அங்கு கல்வி விருத்தியடையமுடியும் என்பதை பல கல்விப்பிரமுகர்கள் கூட வலியுறுத்தியுள்ளனர். ஆனால் இந்த முயற்சிக்கு பெற்றோர் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதை மனவருத்தத்துடன் கூறுகிறேன்.

நமது கல்வி விருத்திக்கு அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் எதிர்நீச்சல் போடும் நிலையில் நமது பெற்றோர்களின் போக்கு மனவருத்தத்தைத் தருகிறது. மக்களது விருப்பத்திற்குமாறாக நான் எதையும் செய்யமாட்டேன். மக்களுக்கு சேவை செய்யபிரதிநிதியேதவிர பிரதிநிதியின் விருப்பத்தை பூர்த்தி செய்ய மக்கள் அல்ல. ஆனால் நல்லதை, சரியானதை செய்ய வேண்டும் என்பதே எனது ஆசை. ஆகவே நமது வருங்கால சந்ததியின் நன்மை கருதி நாம் செயல்படவேண்டியது அவசியமாகும்'' என்றார்.

வடமாநில கல்வியதிபதி திரு ரீ. மாணிக்கவாசகர், திருமதி அமிர்தலிங்கம், வட்டாரக் கல்வியதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## மனுதார் தரப்பில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறியதாவது: இவ்விடயத்தில் ஒரு சமாதான முடிவு காண்பதற்காக, யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பொறுப்பில் விடப்பட்டுள்ளது ஆதலால் ஒரு வாரத்திற்குள் மார்க்கட் விடயமாக ஒரு சமாதான முடிவு ஏற்படலாம் ஆதலால் வழக்கை பின்போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்: கதிர: நாங்கள் விசாரணைக்கு தயார் விசாரணை நடத்துமாறே எதிர்மனுதார் தரப்பில் எமக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட். சகிட்: உயர்மட்டத்தில் பேச்சுவார்த்தை நடக்கிறது. ஒருசமரச முடிவு ஏற்படவிருப்பதால் அதுவரை ஒத்திப் போடவேண்டும்

சட் கதிர: ரெண்டர் கோரியவர்கள் தங்கள் கட்டுப்பணத்தை எடுக்கவேண்டுமென்கிறார்கள். ஆதலால் சீக்கிரம் விசாரணையை முடிக்கவேண்டும்.

சட். சகிட்: 'டுவிஸ்ட்' நடனத்தின்போது யாழ்ப்பாணம் எம். பி. என்னை சந்தித்து தாம் இவ்விடயத்தில் முயற்சி எடுத்துவருவதாக கூறினார்.

நீதிபதி: எங்கே?

சட் சகிட்: ஜின்னா மைதானத்தில் 'டுவிஸ்ட்' நடனத்தில் செனிவரத்தின ஏற்படுத்திய உலக சாதனையை முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்ட பரீத் நஸீர் முயற்சி எடுத்து வருகிறார். அப்போதே யாழ். எம்.பி. தெரிவித்தார். இதனை சுமூகமாக தீர்க்க அரசியல்வாதிகளுக்கு சந்தர்ப்பம் அளித்து அதுசரிவராவிட்டால் விசாரணை தொடர்ந்து நடத்தலாம்.

நீதிபதி: சமாதான தீர்வுக்கு வழியிருக்குமானால் விசாரணையை ஒத்திவைக்கலாம்.

சட் சகிட்: அமைச்சர் மட்டத்தில் சமாதான தீர்வு காண யாழ். எம். பி. முயற்சி எடுத்துவருகிறார்.

சட் கதிர: அப்படிசமாதான முடிவு வருமானால் வழக்கை வாபஸ் பெறலாம் தானே. ரெண்டர் எடுத்தவர்கள் தங்கள் கட்டுப்பணத்தை கோரிக்கொண்டிருக்கிறார்கள்.

சட் சகிட்: கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கடைக்காரர்களுக்கு பெரும்கிராக்கி ஏற்பட்டுள்ளது இப்போது 22 லட்சம் ரூபாவிற்கு ரெண்டர்போன கடைகள் இன்னொருதரம் ரெண்டர் போடப்பட்டால் 40 லட்சம் ரூபாவிற்கு போகும் இந்த வழக்கில் உள்ளூராட்சி அமைச்சராகவிருக்கும்பிரதமர் இதுபற்றி சகல விபரமும் தெரிந்துள்ளார். இதில் ஒரு சுமுகமான முடிவு ஏற்பட யாழ் எம். பி. தொடர்பு கொண்டிருக்கிறார். ஆதலால் ஒத்திபோடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட் கதிர: விசாரணைக்கு இன்று போடப்பட்டுள்ளது.

சட் சகிட்: கடந்ததினம் சுகயீனம் காரணமாக எதிர்மனுதாரின் சட்டத்தரணி வராததினால் இன்றும் அவர் வரமாட்டார் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அவர் வந்துவிட்டார்.

சட் கதிர: மனுதார் தரப்பில் தொகுப்புரை நடுவில் நடந்து கொண்டிருக்கிறது தவணை போடுவதானால் இன்றைய செலவு தொகை தரவேண்டும். பொதுமக்களின் வரிப்பணத்தை வீணாக கரியாக்கக்கூடாது அதுமட்டுமல்ல ஆணையாளர் மீதும் பணத்தை வீணாக்கியதற்கு 'சார்சாஜ்' கேட்டார்கள்.

நீதிபதி: எவ்வளவு தொகை?

சட் கதிர: 250 ரூபா தரவேண்டும்.

சட் சகிட்: அது கூடிவிட்டது 105 ரூபாவாக குறையுங்கள்.

நீதிபதி 200 ரூபா வழக்கு செலவு கட்டுமாறு கட்டளையிட்டு விசாரணையை மே 29ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

[க]

## புதிய...

[1ம் பக்கத் தொடர்ச்சி

யாழ். நகரை உலகப்படத்தில் பெருமைமிக்கநகராக்கவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று கூறினார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம் பாராட்டிப் பேசுகையில், யாழ்ப்பாணத்திலிருந்து முதலாவதாக உலகசாதனையை நிலைநாட்டி உலகசாதனைப் புத்தகத்தில் யாழ்ப்பாணத்தின் பெயரை முதலாவதாக நிலைநாட்டப் போகும் ஒரு தமிழ்ப் பேசும் மகன் என்ற முறையில் அவரின் முயற்சி வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேன் என்றார்.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரக முதலாவது செயலாளர் ஆர். கே. சண்முகம் ஜனாப் பரீத் நஸீர் உலக சாதனையை நிலைநாட்ட இறைவனை பிரார்த்திப்பதாகக்கூறி அவரது முயற்சியையும் பாராட்டினார் லயன்ஸ் கழகத் தலைவர் இராசேந்திராவும் மற்றும் பலரும் வாழ்த்தினர். (கொக்-நி)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா சபார்த்தினஐயர்

சுன்னாகம் தங்கம்மா சபாரத்தினஐயர் அவர்கள் (14-03-79) அன்று காலமாகிவிட்டார். இவர் சுன்னாகம் ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கோயில் தேவஸ்தானம் ச. சோமாஸ்கந்தக்குருக்கள் அவர்களின் தாயாரும் வாலாம்பிகையின் மாமியும், கொழும்பு உமாபதிசர்மா, மட்டக்களப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தியாகராசா, தவமணிதேவி, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்தியகல்லூரி ஆசிரியர் ஈஸ்வரசர்மா, சந்திரகாந்த சர்மா ஸ்ரீபவன், வாழைச்சேனை காகிதஆலை சசிகரன், புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை பாலச்சந்திரன், பிரபா, சுகுமார், சகுந்தலா, மைதிலி, ஜெயந்தி ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவர். ஈமைக் கிரியைகள் 15-03-79 வியாழக்கிழமை நண்பகல் சுன்னாகத்தில் நடைபெறும் நண்பர்கள், உறவினர்கள் இதை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

ச. சோமாஸ்கந்தக்குருக்கள்

1904

# கூட்டணி உதவிகளே முதலில்போய்ச் சேர்ந்தன

## லலித்கூற்றுக்கு அமிர் பதில்

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் சூறாவளி கொடுமைக்குள்ளான மக்களுக்கு முதல் முதல் போய்ச் சேர்ந்த உணவுப் பொட்டலங்களும், உதவிகளும் தமிழ் எம். பிக்களினால் சேகரிக்கப்பட்டனவையே. சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் வீடுவீடாகவும் கடைகடையாகவும் சென்று உதவிகளைச் சேகரித்து அனுப்பினார்கள். அவை இந்திய விமானப்படை விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. இதனை கிழக்குமாகாண மக்கள் நன்கு அறிவார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு ஏ. அமிர்தலிங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறையில் ப. நோ. கூ. சங்கக் கிளையொன்றைத் திறந்து வைக்கையில் வர்த்தக மந்திரி திரு. லலித் அத்துலத்முதலி சூறாவெளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் உதவி புரியவில்லையெனக் கருத்துப்பட பேசியதாக வெளிவந்த செய்தி பற்றிக் குறிப்பிடுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

புனர்வாழ்வுக் கழகத்தினர் விநியோகித்த உதவிகளில் 80 வீதமும் கூட்டணி எம். பிக்களும் தொண்டர்களும் சேகரித்தவையே. இதுமட்டுமின்றி எமது எம். பிக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சில கிராமங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டு தொண்டர்களுடன் சேர்ந்து நிர்மாண வேலைகளைச் செய்துள்ளார்கள்.

எம். பிக்கள் தமது சம்பளத்தில் பணம் செலுத்தினால் அது ஜனாதிபதி நிதிக்கே போய்ச் சேரும். நேரடியாக அம்மக்களுக்கு கிடைக்காது, இன்னமும் அந்நிதியிலிருந்து ஒருசதம்தானும் அவர்களுக்கு கிடைக்கவில்லை, நிவாரண வேலைகள் சரியாக நடைபெறவில்லையென்று நான் சுட்டிக்காட்டியதையடுத்தே ஜனாதிபதி மகாநாடு நடாத்தினார்.

இம்மாதிரி பேசுவதின் மூலம் வர்த்தக அமைச்சர் கிழக்கு மாகாண மக்களை பிரித்துவிடலாம் என்று கனவு கண்டால் அவர் ஏமாற்றமடைவார் என்று திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

## பெற்றோல்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லந்ததாக கூறப்படுகிறது.

இளைஞர்கள் றிவோல்வரும் கிறிஸ் கத்தியும் கொண்டு வந்ததாக மேலும் கூறப்படுகிறது. கொள்ளையர்களினால் விட்டுச் செல்லப்பட்ட கூரிய ஆதம் ஒன்று பொலிசாரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பும் ஊழியர்கள் மூவர் பருத்தித்துறை பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். மணியம், நடராஜா, செல்வநாயகம் ஆகிய ஊழியர்களே பொலிசாரின் விசாரணையில் உள்ளார்கள்.

கொள்ளைச் சம்பவம் சம்பந்தமாக பருத்தித்துறை பொலிசாருக்கு தகவல் கிடைத்ததும், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. நிகால் ஜெயசேகரா, சார்ஜண்ட் செ. மாணிக்கராசா தலைமையில் பொலிஸ் கோஷ்டி சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து, உடனடியாக தேடுதல் முயற்சியில் ஈடுபட்டார்கள். எனினும் சந்தேகத்தின் பேரில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

காங்கேசன்துறைப் பகுதி உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஈசுருபாலாவும் இக்கொள்ளை சம்பந்தமாக விசாரணையில் புதன்கிழமை ஈடுபட்டிருந்தார். பொலிசாரின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

### வேலைநிறுத்தம்

அதே வேளையில் கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் புதன் கிழமை காலையில் திடீரென வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள். ஊழியர்களுக்கு பாதுகாப்பின்மையை எடுத்துக் காட்டி இவ்வேலைநிறுத்தம் நடைபெற்றது. காலை 10 மணிவரை நடைபெற்ற வேலைநிறுத்தம், மேற்படி சங்கத்தின் இயக்குனர் சபைத் தலைவர் திரு. ரி. கந்தசாமி உப-தலைவர் ந. பாஸ்கரன் ஆகியோரின் விளக்கத்தை அடுத்து வாபஸ் பெறப்பட்டது.

[கொக்-நெல்-திரு]

## பண்ணை மார்க்கட்..

(5-ம் பக்கத்தொடர்ச்சி]

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்திற்கும், வியாபாரிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மீண்டும் பண்ணை மார்க்கட் திறக்கப்பட்டுள்ளது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:

கடந்த ஆண்டுகளில் வண்ணாத்திப்பூச்சியின் வாழ்க்கை வட்டக் கேள்விக்கு தமிழ் மாணவர்களுக்கு கூடுதல் புள்ளிகள் வழங்கப்பட்டதாகக் கூறும் அரசியல்வாதிகள் சிலர் எதிர்காலத்தில் மயிர்கொட்டியின் வாழ்க்கை வட்டத்திற்கு கூடுதல் புள்ளிகளை வழங்கியதாகவும் முறையிடு செய்வார்கள் என எண்ணுகின்றேன் என்றார்.

ஜனாப் பரீத் நஸீர் உலக சாதனையை முறியடித்து மேலும் பலமணிநேரம் ஆடி ஒருவராலும் முறியடிக்க முடியாத ஒரு புதிய சாதனையை ஏற்படுத்த இறைவனை வேண்டி அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

ரிக்கோ

சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்

570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 464, 7889

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-